பக்கங்கள்:-15

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 30 | ஞாயிற்றுக்கிழமை | 17.09.2023 | அதிர்வு 47

## புதுக்குடியிருப்பில் இளைஞரின் சடலம்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு – பொன்னம்பலம் வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள தென்னங்காணியில் உருக்குலைந்த நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இராசலிங்கம் சுதர்சன் 02▶

## மக்களின் முழு ஆணையுடன்

# ராஜபக்ஷக்கள் மீண்டெழுவர்!



## சூளுரைக்கின்றார் நாமல்

- சுடர் திலீபன் -

கொழும்பு, செப்ரெம்பர் 17

"ராஜபக்ஷக்கள் சதித் திட்டங்களால் வீழ்ந்த வரலாறும் உண்டு. அவர்கள் மக்கள் ஆணையுடன் மீண்டெழுந்த வரலாறும் உண்டு. எனவே, ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிப்பீடக் கதிரைகளில் அமர்வார்கள். மக்கள் ஆணையுடன் தான் அது நடக்கும்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். 02▶

# வடக்கு - கிழக்கில் படைக் குறைப்பு இல்லை

## இராணுவப் பேச்சாளர் திட்டவட்டம்



வடக்கு, கிழக்கில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குத் தீர்மானிக்கவில்லை என இலங்கை இராணுவம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்குமான கட்டளைத் தளபதிகளின் எண்ணிகை இரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது என வெளியான தகவல் தொடர்பில் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார். 02▶



# அரச நிறுவனங்கள் மீளவும் மறுசீரமைப்பு

## ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி தகவல்

சுற்றாடல் தொடர்பில் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களை மீண்டும் மறுசீரமைக்க அரசு தீர்மானித்துள்ளது என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட 02▶

# மக்கள் பக்கம் நின்று தீர்மானம் எடுப்பேன்

## மைத்திரி அதிரடி அறிவிப்பு



- சுடர் திலீபன் -

"எனது ஜனாதிபதி பதவிக் காலத்தில் மக்களின் ஆணையை நான் உதாசீனம் செய்யவில்லை. அவர்களின் பக்கமே நின்றேன். எதிர் வரும் காலத்திலும் மக்கள் பக்கமே நின்று தீர்க்கமான முடிவுகளை எடுப்பேன்."

– இவ்வாறு 02▶

## இரகசியம்



இன்று வாசகர்களுக்கு நான் இரகசியம் ஏதும் உரைக்கப் போவதில்லை. 'சொல்லாடல்கள்' பற்றிய சில தகவல்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

முதல் விடயம் – நேற்று வாசக நண்பர் ஒருவர் வெளிநாட்டிலிருந்து அழைப்பு 03▶

## வடக்கு - கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு மாகாணத்தில் இராணுவ ஆள்குறைப்பு செய்யப்படவில்லை எனவும், கட்டளைத் தளபதிகளின் எணிக்கை குறைக்கப்படவில்லை எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் அதிகளவான இராணுவத்தினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், பொதுமக்களின் பெருமளவான காணிகளும் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், அவ்வப்போது படையினரின் தேவைக்காகக் காணிகளும் அளவீடு செய்யப்படுகின்றன.

இந்நிலையில், வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என அரசியல்வாதிகளும், பொதுமக்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும் அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மேலும், வடக்கு, கிழக்கில் அதிகளவான படையினர் நிறுத்தப்பட்டுள்ள போதிலும், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன எனச் சமூகச் செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையிலேயே, வடக்கு, கிழக்கில் படையினரின் எண்ணிக்கையைக் குறைக்கப் போவதில்லை என இராணுவம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கை தொடர்பிலும் விவாதிக்கப்படவுள்ள நிலையில் இராணுவத்தினரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் பக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் ஜனாதிபதியும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தல்கள் நெருங்கும் வேளையில் சலசலப்புகளுக்குப் பஞ்சமில்லை. நான் எந்தச் சலசலப்புகளுக்கும் அஞ்சமாட்டேன். ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எவருக்கும் தாரைவார்க்கவும் மாட்டேன்.

ஊழல், மோசடியற்ற ஜனாதிபதியாக நான் பதவி வகித்தேன். இதை விரும்பாத கும்பல், என் மீது ஈஸ்டர் தாக்குதல் குற்றச்சாட்டை முன்வைத்து என் அரசியல் பயணத்துக்குக் களங்கம் விளைவிக்க முயன்றது. ஆனால், இறுதியில் நடந்த உண்மை வெளியாகியுள்ளது. ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் எவருக்கும் மன்னிப்பு வழங்கக்கூடாது." – என்றார்.

## ராஜபக்ஷக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் தற்போது சூடுபிடித்துள்ளது. ஒவ்வொரு கட்சியினரும் மார்தட்டிக்கொண்டு வீர வசனங்கள் பேசுகின்றனர். ஆனால், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மொட்டுக் கட்சி இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. எமது கட்சிக்குள் இருந்துகொண்டு சிலர் தனிப்பட்ட ரீதியில் தெரிவிக்கும் கருத்துக்களுக்கு கட்சியின் தலைமை பொறுப்பு அல்ல.

ராஜபக்ஷக்கள் குடும்பத்தினரின் மீளெழுச்சிக்கு மக்கள் எவரும் இடமளிக்கக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்துள்ளார். அவரின் இந்தக் கருத்து சிறுபிள்ளைத்தனமானது. கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் மண்கவ்வியதை மறந்துவிட்டார் போல். ஜனாதிபதி பதவிக்கும், பிரதமர் பதவிக்கும் ஆசைப்பட்டு இறுதியில் தோற்றுப்போன சஜித் பிரேமதாஸவுக்கு ராஜபக்ஷக்களை விமர்சிக்கவோ அல்லது மொட்டுக் கட்சியை விமர்சிக்கவோ எந்த அருகதையும் கிடையாது. ஏதாவது ஒரு தேர்தலில் வென்று காட்டிவிட்டு எம்மை விமர்சியுங்கள் என்று சஜித்திடம் நான் கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற 29 வயதுடைய இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு, கோம்பாவில் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞரைக் கடந்த 13ஆம் திகதியிலிருந்து காணவில்லை என்று உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், காணாமல்போன அந்த இளைஞர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச நிறுவனங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் சூழலைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்டங்களை மேலும் வலுப்படுத்துவதற்கும் குழுவொன்று நியமிக்கப்படும் என்றும் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

மேலும், சுற்றாடல் மாசடைவதைத் தடுத்து சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, செயலணியொன்றை நியமிக்கவுள்ளார் எனவும், சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான வேலைத்திட்டங்களைத் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துவது மற்றும் கண்காணிப்பது இந்தச் செயலணியின் பொறுப்பாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

துறைமுக நகரின் செயற்கைக் கடற்கரையில் நேற்று முற்பகல் நடைபெற்ற கடற்கரையைச் சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு கூறினார்.







# வறட்சியால் இந்த முறை சிறுபோகத்தில் 66 ஆயிரத்து 234 ஏக்கர் பயிர்கள் அழிவு

## 67ஆயிரத்து 408 விவசாயிகள் பாதிப்பு

வறட்சி காரணமாக இம்முறை சிறுபோகத்தில் 66 ஆயிரத்து 234 ஏக்கருக்கும் அதிகமான விளைநிலங்களில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்களும் ஏனைய பயிர்களும் அழிவடைந்துள்ளன.

இதன் காரணமாக 67 ஆயிரத்து 408 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என விவசாய காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

இதனிடையே வறட்சி, மழை மற்றும் புழுக்களின் தாக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்பு உள்ளிட்ட காரணிகளால், விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர்ச்சேதம் குறித்த மதிப்பீடு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக விவசாய காப்புறுதி சபையின் தலைவர் வீரசேகர தெரிவித்துள்ளார்.

வறட்சியினால் ஏற்பட்ட பயிர்ச்சேதங்களை மதிப்பிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன. மழையினால் ஏற்பட்ட பயிர்ச்சேதங்களை மதிப்பிடும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என விவசாய அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன், முழுமையான பயிர்ச்சேத மதிப்பீட்டு அறிக்கை விவசாய

# சட்டவிரோதமான முறையில் தொழிலுக்காக வெளிநாடு செல்வோர் எண்ணிக்கை உயர்வு

சட்டவிரோதமான முறையில் தொழிலுக்காக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுகிறது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அவ்வாறான 2,500 வரையான சம்பவங்கள் பதிவாகியுள்ளன என எனப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன குறிப்பிட்டார்.

கடந்த வருடத்தில் இந்த எண்ணிக்கை 1900 ஆகக் காணப்பட்டது.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்வதைத் தவிர்க்குமாறு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுத்தார்.

“என்ன நீங்கள் ‘காணொளி’, ‘காணொலி’ என்று இரண்டு சொற்களைப் பயன்படுத்துகின்றீர்கள். அதுவும் இந்த ‘சனல்-4’ விவகாரம் சூடு பிடித்த பின்னர்தான் இந்தச் சொல்லாடல்கள் அதிகம் வருகின்றன. இரண்டில் எது சரி?” - என்று கேட்டார் அவர்.

நல்ல கேள்வி. இப்படி ஒரு கேள்வி குறைந்தபட்சம் என் சக பத்திரிகையாளர் ஒருவரிடம் இருந்து வராதா என்று நான் பார்த்திருந்தேன்.

இந்தக் காணொளி, காணொலி விடயத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

ஒன்று - பெரும்பாலும் வீதியோரங்கள், வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.ரி.வி. கமரா போன்றவற்றில் பதியப்படும் பதிவுகள், விடயங்கள். ஒளிப் பதிவு இருக்கும். சத்தம் வராது. அதாவது ஒலிப்பதிவு இருக்காது. அவற்றைப் பார்க்கலாம் அல்லது காணலாம். கேட்க முடியாது. அங்கு ஒலி இல்லை. அதனால் ‘காணொளி’ என்று சொல்லாடலினால் அதனைக் குறிக்கிறோம்.

அடுத்தது வீடியோ போன்றது. ஒடியோவும் இருக்கும். திரை பதிவையும் பார்க்கலாம். சத்தமும் கேட்கும். இப்போது ‘சனல்-4’ அஞ்சல் வடிவத்தில் நீங்கள் கண்ணால் பார்த்து, காதால் கேட்கிறீர்கள். காணுதலும் ஒலியும் அங்கு உண்டு. அதனால் ‘காணொலி’ என்கிறோம். அதுவே சத்தம் இன்றி சி.சி.ரி.வி. படம் போல வெறும் திரையில் காட்சி மட்டுமே வருமானால் அதை ‘காணொளி’ என்கிறோம்.

இதைத் தொலைபேசியில் என்னைப் பிடித்த அந்த வாசகருக்கு விளங்கப்படுத்தினேன். அவர் ஆச்சரியமாக அடுத்த கேள்வியைப் போட்டார்.

“இப்படிஎல்லாம்நுணுக்கமாகப்பார்த்தா பத்திரிகையில் சொல்லாடல்களைப் பயன்படுத்துகின்றீர்கள்?”- என்று விநோதமாகக் கேட்டார் அவர்.

அவர் கேள்வியில் நியாயம் இல்லாமல் இல்லை. எங்கள் ஊடகவியலாளர்கள் பலரும் இப்படி ஆழமாகச் சிந்தித்து எழுதுவது இல்லை என்று நான் நினைக்கிறேன்.

‘கொள்ளை’ - வேறு. ‘களவு’ - வேறு. சட்டத்தில் தெளிவான வேறுபாடு உண்டு. இரண்டையும் குழப்பி அடித்துத்தான் நம் செய்தியாளர்கள் பலரும் செய்தி எழுதுகின்றார்கள். ‘நள்ளிரவில் இரண்டு வீடுகளில் கொள்ளை’ என்ற தலைப்புடன் செய்தி தொடங்கும். கடைசியில் பார்த்தால் ‘வீட்டுக்காரர்கள் விடிந்து எழுந்து பார்த்த போதுதான் வீட்டில் இருந்த பொருள்கள் மாயமாகியிருந்தன என்பது அவர்களுக்குத் தெரிய வந்தது’ - என்று செய்தியைத் திருட்டு விவகாரமாக முடிப்பார்கள்.

தலைப்பில் செய்தி கொள்ளை என்று இருக்கும். செய்தியில் விடயமோ திருட்டுப் பற்றியதாக இருக்கும்.

ஒரு தரப்பு மீது அல்லது அமைச்சர் மீது நம்பிக்கை இல்லை என்று சபையில் அல்லது நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படுவது நம்பிக்கையில்லாப் பிரேரணை. அது நிறைவேற்றப்பட்டால்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம். அது வரையில் அது பிரேரணைதான்.

அண்மையில் சுகாதார அமைச்சருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையையே கொண்டு வந்தார்கள். அது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டால்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகும். நிறைவேற்றப்படும் வரை அது பிரேரணையையே. ஆனால் பல ஊடகங்களும் எடுத்த எடுப்பிலேயே சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்று பிரேரணையாக வரும்போது செய்தியை வெளியிட்டு விடுகிறார்கள்.

அரசு வேறு. அரசாங்கம் வேறு. ஆங்கிலத்தில் அரசு என்பது State. அதுவே அரசாங்கமாகும் போது Government.

ஆனால் பெரும்பாலும் தலைப்புக்கும், எழுத்துக்கும் வசதி கருதி அரசாங்கம் என்பதையும் அரசு என்றே குறிப்பிட்டு நாங்கள் குழப்பி வருகிறோம்.

இப்படி நாம் தெரிந்தே இழைக்கும் தவறுகள் பலப்பல. விட்டீர்களானால் ஒரு முழுநாள் தொடர்ந்து இது குறித்து ‘லெக்சர்’ அடிப்பேன். களைத்து விடுவீர்கள். அதனால் விட்டு விடுகிறேன்.

ஆனால் ஒன்று - எங்கள் வாசகர்கள் சரியான ‘ஷார்ப்’. நீண்ட காலத்துக்கு நாங்கள் இப்படிப் பொறுப்பின்றி கயிறு விட முடியாது. என் சக ஊடகவியலாளர்கள் இதனைப் புரிந்து கொண்டால் நல்லது.

# தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு 1,591 வீடுகள் இன்று கையளிக்கப்படவுள்ளன

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் தமிழர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்படவுள்ளன என்று தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தமிழகத்தில் 13 மாவட்டங்களில் 79.70 கோடி இந்திய ரூபா மதிப்பில் 1,591 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தின் வேலூரை அண்மித்துள்ள மேல்மொனவூரில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் நடைபெறும் நிகழ்ச்சியில், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பயனாளிகளிடம் வீடுகளை ஒப்படைக்க உள்ளார்.

மேலும், காணொலி வாயிலாக 13 மாவட்டங்களில் உள்ள 19 இலங்கை தமிழர் முகாம்களில் வசிப்போருக்கான வீடுகளை ஒப்படைக்கும் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வேலூர் மாவட்டத்தில் மாத்திரம் 11 கோடி இந்திய ரூபா மதிப்பில் 220 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் தமிழர்களுக்காக தமிழ்நாடு அரசு சார்பில் வீடு கட்டும் திட்டத்தை மாநில முதல்வர் மு.க. ஸ்டாலின் கடந்த 2021 ஆம் ஆண்டு வேலூரில் தொடங்கி வைத்தார்.

142.16 கோடி இந்திய ரூபா மதிப்பில் 3,510 வீடுகளைக் கட்டும் நடவடிக்கை இதன்போது ஆரம்பிக்கப்பட்டது.

இன்றைய நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ரயில் மூலம் நேற்று இரவு வேலூர் சென்றார். அத்துடன் இன்று இரவு ரயில் மூலம் அவர் சென்னை திரும்பவுள்ளார் என்றும் தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# ஜோர்தான் செல்லும் தொழிலாளருக்கு புதிய காப்புறுதித் கொள்கை அறிமுகம்

வீட்டு வேலைக்காக ஜோர்தான் செல்லும் தொழிலாளர்களுக்காக புதிய காப்புறுதிக் கொள்கையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன் கீழ் பணி ஒப்பந்த காலத்தில், குறித்த தொழிலாளர் உயிரிழந்தால் அல்லது அவசர விபத்துகளால் நிரந்தர ஊனமுற்றால் இழப்பீடு வழங்கப்படும்.

இது தவிர மருத்துவ சிகிச்சை, அறுவை சிகிச்சை மற்றும் கொவிட் போன்ற தொற்றுநோய்களுக்கும் இந்த காப்புறுதி மூலம் இழப்பீடு வழங்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசாங்கத்தின் நிதி சாராத சொத்துகளை கணக்கிடும் செயற்பாட்டில் குறைபாடுகள்

## ‘கோபா’ குழுவில் வெளிக்கொணர்வு

அரசாங்கத்தின் நிதி சாராத சொத்துகளைக் கணக்கிடும் செயற்பாட்டில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன என கோபா எனப்படும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய நாடாளுமன்றக் குழுவில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களின் நிதிச் சொத்துகளை முகாமைத்துவப்படுத்தும் செயற்பாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்வதற்காக இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தெரிய வந்துள்ளது.

நாட்டின் சொத்துகள் தொடர்பில் கூட்டறிக்கையொன்றை தயாரிப்பதற்கான முறைமையொன்று இதுவரை காணப்படவில்லை என கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இது பாரதூரமான நிலைமை என அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# பொலிஸார், சாரணர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு




(எஸ்.நிதர்ஷன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவ காலத்தில் கடமையாற்றிய பொலிஸார் மற்றும் சாரணர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று ஆலய வளாகத்தில் நடைபெற்றது.

நேற்றுக் காலை உற்சவ காலத்தில் கடமையாற்றியவர்களுக்காக விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று காளாஞ்சியும் கையளிக்கப்பட்டது

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர். யாழ். மாவட்ட சாரணர் சங்கத் தலைவர், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# எதிர்ப் பாசறையில் உள்ளவர்களையும் உள்வாங்கிப் பயணிக்க முயற்சிப்போம்!

## சாய்ந்தமருதில் அஷ்ரப் நினைவேந்தலில் ஹக்கீம் உரை



**(ஏ.எல்.எம்., நூருல் ஹுதா உமர், எஸ்.அஷ்ரப்கான், சப்னா றிபாஸ்)**

"முஸ்லிம் சமூகத்தின் ஏகோபித்த குரலாக அரசியல் உச்சத்தை எட்டும் பாதையில் முஸ்லிம் காங்கிரஸை வழிநடத்துவோம். இதற்காக மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின் அந்திமகால முயற்சிகளை நாம் முன்னெடுப்பதற்கான ஆரம்ப நிகழ்வாக இன்றைய நினைவேந்தலை வரித்துக் கொள்வோம்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் 23 ஆவது வருட நினைவு தின தேசிய நினைவேந்தல் நிகழ்வு நேற்று சாய்ந்தமருது பௌசி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போது அங்கு உரையாற்றிய சமயமே ஹக்கீம் இவ்வாறு கூறினார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இந்தியா வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் கவிமாமணி பேராசிரியர் முனைவர் அப்துல் காதர் கலந்து கொண்டு தலைவர் அஷ்ரப்பின் அரசியல் முன்னெடுப்புகள், இலங்கை அரசியலில் அஷ்ரப்பின் வகிபாகம், இலங்கை தேசிய அரசியலில் அஷ்ரப்பின் சாதனைகள், முஸ்லிம் அரசியலில் அஷ்ரப் சாதித்தவை, சர்வதேச தொடர்புகளை பேண அஷ்ரப் கையாண்ட முறைகள் தொடர்பில் சிறப்புரை நிகழ்த்தினர்.

மு.கா தவிசாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல். எம்.மஜீட் (முழக்கம் மஜீத்) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் ஆத்ம ஈடேற்றத்திற்காக விசேட கத்தமுல்



குர்ஆன், மற்றும் விசேட துஆ பிரார்த்தனை இடம்பெற்றது.

கல்முனை மாநகர முன்னாள் மேயர் கலாநிதி சிராஸ் மீரா சாஹிப்பின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நினைவேந்தல் நிகழ்வில் ஹக்கீம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:–

முஸ்லிம் காங்கிரஸ் எனும் பேரியக்கம் நாட்டின் ஆட்சிக் கதிரைகள் பக்கம் இருந்தாலும், எதிர்த் தரப்பில் இருந்தாலும், முஸ்லிம் சமூகத்தின் ஆளும் கட்சி முஸ்லிம் காங்கிரஸேதானாகும்.

மறைந்த தலைவர் அஷ்ரப் தமது அந்திம காலத்தில் முன்னெடுத்து விட்டுச் சென்ற விடயங்கள் பல உள்ளன.

முக்கியமாக அவர் அந்திம காலத்தில் கட்சியோடு முரண்பட்டு இருந்தவர்கள் மற்றும் மாற்றுக் கட்சிகளில் இணைந்து இருந்தவர்களை வீடு வீடாகச் சென்று சந்திப்புகளை நடத்தி, முஸ்லிம் காங்கிரஸுக்குள் உள்வாங்கும் முயற்சிகளைச் செய்து வெற்றியும் கண்டார்.

அந்த வகையில் வெளியில் உள்ளவர்களையும் நமது பாசறையில் இணைப்பதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுக்க வேண்டும். இதற்காக முஸ்லிம் காங்கிரஸின் கதவு இனி எப்போதும் திறந்தே இருக்கும்.

நமது அரசியலைப் பொறுத்தவரை அஷ்ரப்புக்கு முன்பும் பின்பும் என்றே எழுதப்படும்.

முஸ்லிம் காங்கிரஸை மலினப்படுத்தி, சிறுமைப்படுத்தி, சிதைத்து விடும் எத்தகைய முயற்சிக்கும் இடமளிக்க முடியாது.

அனைவருக்கும் நியாயம் செய்யும் தலைவராகவே கட்சியின் செயற்பாடுகளை நான் முன்னெடுத்து வருகிறேன்.

முஸ்லிம் காங்கிரஸைத் தொடர்ந்து முஸ்லிம்கள் அனைவரதும் பாசறையாகவும் அரவணைக்கும் அரசியல் கட்டமைப்பாகவும் முன் கொண்டு செல்வோம்.– என்றார்

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரிஷ் ,பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் ஆகியோர் உரையாற்றினர்.

இந்நிகழ்வில் உலமாக்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர், பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ், எம்.எஸ் தௌபீக், முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம் மன்சூர், செய்யது அலி சாஹீர் மௌலானா, /ஹனைஸ் பாருக், முன்னாள் மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் கட்சிப்பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பெருந்திரளான கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சந்திரிகாவின் முன் முயற்சி

இலங்கையில் ஆட்சிக்கட்டில் இருந்த பல அரசியல் தலைவர்கள் தத்தமது அதிகார காலங்களில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்ற பெயரில் - ஒப்புக்குச் சப்பாணியாகவேனும் - சில முன் முயற்சிகளை எடுத்திருக்கின்றார்கள் அல்லது முன் முயற்சிகளை எடுப்பவர்கள் போலக் காட்டி சில காய் நகர்த்தல்களை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில், இலங்கைத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ்ப் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகத்தில், ஐக்கியமான இலங்கைக்குள், சமஷ்டி ஆட்சி முறை தழுவிய, தீர்வு ஒன்றை ஆராய்ந்து பார்ப்பதற்குத் தமிழர்களின் பிரதிநிதிகளான விடுதலை புலிகளும், இலங்கை அரசின் பிரதிநிதிகளும் கொள்கை அளவில் இணங்கிய 'ஒஸ்லோ அறிவிப்பு' முக்கியமான தாகும்.

நோர்வேயில் நடைபெற்ற சமாதான பேச்சுக்களில் கொள்கை அளவில் இத்தகைய இணக்கம் காணப்பட்டதாக இரு தரப்பினரும் சேர்ந்து நோர்வே அனுசரணையாளர்கள் முன்னிலையில் அறிவித்தனரே தவிர, அதற்கு மேல் இவ்விடயத்தில் எதுவுமே நடக்கவில்லை. அல்லது முன்னகரவில்லை.

ஆனால், காத்திரமான முன்னகர்வு மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்றால் அது சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது 2000 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட தீர்வுத் திட்ட எத்தனம்தான்.

பிராந்தியங்களின் ஒன்றியம் (Union of Regions) என்ற நாட்டின் கட்டமைப்பின் கீழ் தமிழர் தாயகத்துக்கு அதிகாரங்களைப் பகிரும் அந்த முயற்சி ஓரளவுக்கு ஒற்றையாட்சி முறைமைக்கு சற்று வெளியே வரும் ஒரு யோசனைத் திட்டமாகத்தான் இருந்தது.

அப்போதைய யுத்த நிலைமை மற்றும் அரசியல் கள நிலைவரங்கள் காரணமாக அந்த முயற்சி முன்னகர முடியாமல் தடைப்பட்டுப் போயிற்று.

ஆயினும், அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக புதிய அரசமைப்பு நகலை நேரடியாக நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் கட்டம் வரையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னேறி இருந்தார்.

அந்த யோசனைத் திட்டம் மூலம் தமிழர்களுக்கு ஏதோ கணிசமான அதிகாரங்களைப் பகிர்ந்து, ஒன்றுபட்ட நாட்டுக்குள் தமிழர்களையும் அரவணைத்து, இணைத்து, நல்லிணக்கப் பயணம் ஒன்றை முன்னெடுக்கும் தற்றுணிவும், திடசங்கற்பமும், தீர்க்கதரிசனமும் அச்சமயத்தில் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவிடம் இருந்தன என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த வகையில் பார்க்கும்போது, தமிழர்களைப் பொறுத்தவரை மற்ற எல்லா ஜனாதிபதிகள், பிரதமர்களையும் விட சந்திரிகா குமாரதுங்க சற்று உயர் நிலையில் மதிக்கப்படுகின்றார் என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

குறைந்தபட்சம் 13 ஆவது திருத்தத்தையாவது இப்போது விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டும், அந்த முயற்சிக்கு தமது முழு ஆதரவு உண்டு, அந்தச் சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வடக்கு, கிழக்கில் மாகாண சபைத் தேர்தல்களையாவது உடன் நடத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார்.

நல்லிணக்கம், புரிந்துணர்வு ஆகியவற்றின் மூலம் நின்று, நிலைத்து, நீடிக்கும் தீர்வு ஒன்றை நாட்டுக்குப் பெற்றுத் தர வேண்டும் என்ற விருப்பம் இருப்பதனாலேயே இந்த வழியில் அவர் சிந்திக்கின்றார் என்று கூறுவது தவறல்ல.

## கடிதம் எழுதி வைத்துவிட்டு 15 வயதுச் சிறுமி மாயம்!




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள மகளூரில் வீட்டில் இருந்த 15 வயது சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மகளூர் முதலாம் பிரிவு, நீலகிரி வீதியைச் சேர்ந்த ரமேஸ்குமார் கிரிஸ்டிகா என்ற 15 வயது சிறுமியே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

"எனது பெற்றோர் கஷ்டப்படுகின்றனர். அதனால் என்னைப் பார்க்க முடியாத நிலையில் அவர்கள் இருக்கின்றனர். என்னைப் பார்க்கக் கூடிய சிங்கள வீடு ஒன்றுக்குச் செல்கின்றேன்" – என்று கடிதம் ஒன்றை அந்தச் சிறுமி சம்பவ தினம் எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறி காணாமல்போயுள்ளார்.

இது தொடர்பில் சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சிறுமியின் தந்தை மேசன் தொழில் செய்து வருகின்றார் எனவும், மூத்த சகோதரன் திருமணம் முடித்துச் சென்றுள்ளார் எனவும், சிறுமியும் அவருடன் சகோதரன் ஒருவர் உட்பட இருவர் பெற்றோருடன் வாழ்ந்து வருகின்றனர் எனவும், பெற்றோர் கஷ்டப்பட்டு வருகின்றனர் எனவும், தந்தையின் தாயாரான அப்பம்மா மற்றும் உறவினர்கள் மாத்தளையில் வசித்து வருகின்றனர் எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களாக சிறுமி அப்பம்மாவுடன் வாழ்ந்து வந்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

காணாமல்போன சிறுமி தொடர்பான விசாரணைகளை களுவாஞ்சிக்குடிக் குற்றத் தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிராம அலுவலர்களின் கொடுப்பனவுகள் உயரும்

கிராம உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழுவொன்றை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செயலமர்வொன்றில் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலாளர்களுக்காக நடைபெறும் இந்த இரண்டு நாள் செயலமர்வில் கிராம உத்தியோகத்தர்கள் இடையே நிலவும் பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்ட அதிகாரிகளையும் குளவிகள் பதம் பார்த்தன

(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா,செப்.17

தோட்ட உதவி அதிகாரி மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர் ஆகியோரும் குளவி கொட்டுக்கு இலக்காகினர்.

நேற்று மாலை 4.30 மணிக்கு நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள மறே தோட்ட உதவி அதிகாரி மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர் ஆகியோரே குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கபட்டு சிகிச்சை பெற்று வெளியேறினார்கள் என மாவட்ட வைத்தியசாலை அதிகாரி தெரிவித்தார்.

# தமிழகத்தில் 30 இடங்களில் புலானாய்வு பிரிவு சோதனை!

தமிழகத்தின் சென்னை, கோவை, தென்காசி மாவட்டங்களில் 30 இடங்களில் என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலானாய்வு முகமை அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ள்ளனர்.

கோவை உக்கடத்தில் இடம்பெற்ற கார் குண்டு வெடிப்பு தொடர்பாக இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

கோவையில் கடந்த ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதி உக்கடத்தில் உள்ள கோட்டை சங்கமேஸ்வரர் கோயிலின் முன் கார் குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இதில் ஜமேசா முபின் என்பவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து முபினின் உறவினர்கள், நண்பர்கள், அவருடன் தொடர்புடையவர்கள் என 11 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

இந்த நிலையில், நேற்று கோவைக்கு ஹைதராபாத்தில் இருந்து என்.ஐ.ஏ. அதிகாரிகள் சென்றுள்ளனர். அவர்கள் 22 குழுக்களாகப் பிரிந்து 22 இடங்களில் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். ஒரு குழுவில் 4 முதல் 5 அதிகாரிகள் பணி



யாற்றியுள்ளனர்.

நகர எல்லைக்குள் உக்கடம், கவுண்டம் பாளையம், ஆர்எஸ்புரம், கிணத்துக்கடவு உள்பட 21 இடங்களிலும் குனியமுத்தூரில் ஓரிடத்திலும் சோதனை நடைபெற்றுள்ளது. சோதனை நடைபெறும் பகுதிகளில் உள்ளூர் பொலிஸாரும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சோதனை நடைபெறும் பகுதியில் இருந்து யாரும் வெளிவரவும் உள்ளே செல்லவும் அதிகாரிகள் அனுமதிக்க வில்லை.

கடந்த ஒக்டோபரில் அரபிக் கல்லூரியில் இடம்பெற்ற சோதனையின் போது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. அதன் அடிப்படையிலேயே தற்போது அங்கு மீண்டும் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன என தெரிவிக்கப் பட்டுள்ளது .

இதுதவிர சென்னையில் ஈஞ்சம் பாக்கம், திருவிகநகர் உள்ளிட்ட இடங்களிலும், தென்காசி மாவட்டம் கடையநல்லூரிலும் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

# நிபா வைரஸ் காரணமாக கேரளாவில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் துரிதம்!





இந்தியாவின் கேரள மாநிலத்தில் பரவிவரும் நிபா வைரஸ் காரணமாக அங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, எதிர்வரும் 24ஆம் திகதிவரை பாடசாலைகள் மேலதிக வகுப்புகள் மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

கேரளாவில் இதுவரை ஆயிரத்து 80 பேரிடம் பரிசோதனைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன என அந்த மாநிலத்தின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

நிபா வைரஸ் மனிதர்கள் மற்றும் விலங்குகளிடமிருந்து பரவுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், குறித்த வைரஸ் மூளையை தாக்குகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி நிபா பாதிப்புக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 1080 ஆக உள்ளது. இவர்களில் 327 பேர் சுகாதாரப் பணியாளர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரே நாடு ஒரே தேர்தல்: 23 இல் முதல் கூட்டம்

ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறும் என்று அந்தக் குழுவின் தலைவரும், முன்னாள் குடியரசுத் தலைவருமான ராம்நாத் கோவிந்த் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல், சட்ட மன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல் ஆகியவற்றை ஒன்றாக நடத்துவது குறித்து ஆய்வு செய்வதற்காக முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் மத்திய அரசு கடந்த 2 ஆம் திகதி ஒரு குழுவை அமைத்தது.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் கட்சியின் மக்களவைத் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, மாநிலங்களவை முன்னாள் தலைவர் குலாம் நபி ஆசாத், 15 ஆவது நிதி ஆணையத்தின் முன்னாள் தலைவர் என்.கே. சிங், மக்களவை முன்னாள் பொதுச் செயலாளர் சுபாஷ் காஷ்யப், மூத்த வழக்கறிஞர் ஹரிஷ் சால்வே, முன்னாள் ஊழல் கண்காணிப்பு ஆணையர் சஞ்சய் கோத்தாரி ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் ஜனாதிபதியானால் அரச ஊழியர்களை பணிநீக்குவேன்!

## குடியரசு கட்சி வேட்பாளர் விவேக் ராமசாமி அறிவிப்பு



அமெரிக்க ஜனாதிபதியாக தான் தேர்ந்தெடுக்கப்பட்டால் அரசின் செல வீனங்களை குறைக்கும் வகையில் பல்வேறு அரச நிறுவனங்களை மூடு வேன் எனவும் 75 சதவீதத்துக்கும் அதிகமான அரச ஊழியர்களை பணி நீக்கம் செய்வேன் என்றும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமி அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் குடியரசு கட்சி சார்பில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராம சாமி போட்டியிட உள்ளார்.

குடியரசுக்கட்சியில் இருந்து வேறு எவரும் தன்னை எதிர்த்து போட்டியிடக் கூடாது என ட்ரம்ப் ஏற்கனவே அறிவித் திருந்த நிலையில், இந்திய வம்சாவ ளியை சேர்ந்த விவேக் ராமசாமி போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார். அத்துடன், குடியரசு கட்சியினரின் ஆதரவினை பெற தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில் தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியின் போது, அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையம் உள்ளிட்ட அரசு நிறுவனங் களை மூடும் திட்டம் உள்ளது.

எப்.பி.ஐ. என்று அழைக்கப்படும் மத்திய புலனாய்வு அமைப்பு, கல்வித்துறை, மது, புகையிலை, துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள் பணியகம், அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையம் உள்ளிட்ட அரசு நிறுவனங்களை மூடும் திட்டம் உள்ளது.

மேலும், 4 ஆண்டு பதவி காலத்துக் குள் 22 இலட்சத்துக்கும் அதிகமாக இருக்கும் அரசு பணியாளர்களின் எண்ணிக்கையில் 75 சதவீதத்தை குறைப் பதே தனது இறுதி இலக்காக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# ஜேர்மனில் சில மாதங்களில் குடியுரிமை மறுசீரமைப்பு!



ஜேர்மன் குடியுரிமை மறுசீரமைப்புகள் இந்த ஆண்டு இறுதியில் நிறைவேற்றப் படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவர்கள் இரட்டைக் குடியுரிமை பெறும் விடயம் எளிதாக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஜேர்மன் பெடரல் கேபினட், கடுமையான குடியுரிமை விதி களை தளர்த்தி இரட்டைக் குடியுரிமையை அனுமதிக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க குடியுரிமை மறுசீரமைப்பு சட்டத்தை அங்கீகரித்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜேர்மன் சேன்ஸலர் ஓலாஃப் ஷோல்ஸ், அதிக வெளிநாட்டவர்கள் ஜேர்மன் குடியுரிமை பெறுவதை விரும்புகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜேர்மனியில் வாழும் வெளிநாட்ட வர்கள் பலர், குடியுரிமைச் சட்ட மாற்றம் தொடர்பிலான செய்திக்காக நீண்ட நாட்களாக காத்திருக்கிறார்கள்.

இந்த நிலையில், ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவர்கள் இரட்டைக் குடியுரிமை பெறும் விடயம் எளிதாக்கப்பட உள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கமைய, ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவர்கள் குடியுரிமை கோரி விண்ணப்பிக்கவேண்டுமானால், அவர் கள் எட்டு ஆண்டுகள் ஜேர்மனியில் வாழ்ந் திருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை மாற்றி, ஐந்து ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்திருந்தால் போதும் என முடிவு செய்யப்பட உள்ளது.

ஜேர்மனியில் பிறக்கும் குழந்தைகள், அவர்களுடைய பெற்றோரில் ஒருவரா வது சட்டப்படி ஜேர்மனியில் ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக வாழ்ந்திருக்கும் பட்சத்தில், அந்தக் குழந்தைகள் தானாகவே ஜேர்மன் குடிமக்களாக ஆகிவிடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## வாக்னரை தீவிரவாத அமைப்பாக அறிவிப்பு

ரஷ்யாவின் வாக்னர் கூலிப்ப டையை தீவிரவாத அமைப்பாக அறிவித்து உத்தியோகப்பூர்வமாக தடை செய்வதாக பிரித்தானியா அறி வித்துள்ளது.

செப்டெம்பர் 6 ஆம் திகதி இந்த விவகாரம் தொடர்பில் முடிவெடுக் கப்படும் என பிரித்தானிய அரசாங்கம் குறிப்பிட்டிருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

2022 இல் ரஷ்ய சிறைக் கைதிகளை தமது குழுவில் இணைத் துக்கொண்ட பிரிகோஜின் 25 ஆயிரம் பேரை உறுப்பினர்களாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் ரஷ்யாவின் விமான விபத்தில் வாக்னர் கூலிப்படையின் நிறுவனர் யெவ்ஜெனி பிரிகோஜின் உயிரிழந்த நிலையில், வாக்னர் கூலிப்படையின் எதிர்காலம் நிச்சயமற்றதாக கருதப்பட்டது.

இதற்கமைய, 2023 ஜனவரில் வாக்னர் கூலிப்படையை நாடு கடந்த குற்றவியல் அமைப்பு என அமெரிக்கா அறிவித்துள்ளது.

மேலும், ஐரோப்பிய நாடுகள் பல வாக்னர் கூலிப்படையை தீவிரவாத அமைப்புகள் பட்டியலில் இணைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆசியக் கிண்ண இறுதி மோதல் இன்று

# இலங்கை - இந்தியா கொழும்பில் பலப்பரீட்சை




கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள ஆசியக் கிண்ண இறுதியாட்டத்தில் இலங்கை - இந்திய அணிகள் மோதவுள்ளன.

ஆசியக் கிண்ண 50 ஓவர்கள் கிரிக்கெட் தொடர் கடந்த ஆகஸ்ட் 30ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

இத்தொடர், ஆரம்ப காலத்தில் 50 ஓவர்கள் கொண்ட போட்டியாகவே நடைபெற்று வந்தது. ஆனால், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இதில் இருபது-20 போட்டிகளும் நடத்தப்படுகின்றன. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் மாறி மாறி இரு வகைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இம்முறை 50 ஓவர்கள் போட்டிகள் நடைபெற்று வரும் நிலையில், இத்தொடரில் மொத்தம் 6 ஆசிய அணிகள் பங்கேற்றுள்ளன. அவை “ஏ”, “பி”. என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.

அதன்படி, பாகிஸ்தான், இந்தியா, நேபாள் அணிகள் “ஏ” பிரிவிலும் இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் அணிகள் “பி” பிரிவிலும் இடம்பிடித்தன.

ஒவ்வொரு பிரிவிலும் இடம்பிடித்த அணிகள் ஏனைய அணிகளுடன் தலா ஒருமுறை மோதின. இதன் அடிப்படையில், “ஏ” பிரிவில் முறையே முதலிரு இடங்களைப் பிடித்த பாகிஸ்தான் (3 புள்ளிகள்), இந்தியா (3 புள்ளிகள்) அணிகளும், “பி” பிரிவில் முறையே முதலிரு இடங்களைப் பிடித்த இலங்கை (4 புள்ளிகள்), பங்களாதேஷ் (2 புள்ளிகள்) அணிகளும் அடுத்த சுற்றான “சுப்பர்-4” சுற்றுக்கு முன்னேறின.

இச்சுற்றில் நான்கு அணிகளும் ஏனைய அணிகளுடன் தலா ஒரு முறை மோதின.

இதில் முறையே முதலிரு இடங்களைப் பிடித்த இந்தியா (3 புள்ளிகள்) மற்றும் இலங்கை (3 புள்ளிகள்) அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன.

இந்நிலையில், இதன் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் ஆரம்பித்து பகல் - இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

இத்தொடரில் சுப்பர் - 4 சுற்றில் இலங்கை அணி, இந்திய அணியிடம் ஏற்கனவே தோற்றுள்ள நிலையில் இன்றைய ஆட்டத்தில் இந்தியாவை எதிர்கொள்ளவுள்ளது.

ஏற்கனவே, நடைபெற்ற ஆசியக் கிண்ணத் தொடர்களில் இந்திய அணி 7 தடவைகளும், இலங்கை அணி 6 தடவைகளும், பாகிஸ்தான் அணி 2 தடவைகளும் சம்பியன்களாகியுள்ளன.

கடந்த ஆண்டு (2022) நடைபெற்ற ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி வெற்றியீட்டியிருந்தது.

இந்நிலையில், இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் வெற்றிபெற்று இந்திய அணியுடன் சம்பியன் பட்டத்தை சமநிலைப்படுத்துமா இலங்கை அணி? அல்லது இந்தியா தனது சம்பியன் பட்ட எண்ணிக்கையை எட்டாக உயர்த்துமா என்பதை இன்றைய ஆட்டமே தீர்மானிக்கும்.

எது எப்படியோ இன்றைய ஆட்டத்தில் பங்கேற்கவுள்ள இரு அணிகளும் தம்முடன் மோதும் எதிரணிக்கு சவால் விடும் வகையில் தமது ஆட்டத்தை வெளிப்படுத்தும் என்பது திண்ணம்.

அதேவேளை, இந்த இறுதியாட்டம் இரு அணிகளின் ரசிகர்களுக்கும் பெரு விருந்தாக அமையும் என்பதிலும் மாற்றுக்கருத்து இருக்காது என நம்பலாம்.





# பிரதமரைச் சந்தித்த நடிகர் பிரபுதேவா

திரைப்பட படப்பிடிப்பிற்காக இலங்கை வந்துள்ள பிரபல நடிகரும், நடனக் கலைஞருமான பிரபு தேவா பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துள்ளார்.

இது குறித்த படங்களை பிரதமர் அலுவலகம் தனது உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.

# 17 வயது மகள் மீது பாலியல் சேட்டை புரிந்த தந்தையாருக்கு விளக்கமறியல்

(கனகராசா சரவணன்) )

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 17 வயதுடைய சிறுமியான தனது மகள் மீது பாலியல் சேட்டை புரிந்த 58 வயதுடைய தந்தையை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

சிறுமியான மகள் மீது தந்தையாரான தமது கணவன் பாலியல் சேட்டை புரிந்துள்ளதாக தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையை அடுத்து பொலிஸார் வெள்ளிக்கிழமையன்று அந்நபரைக் கைது செய்தனர். பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

கைது செய்யப்பட்ட 58 வயதுடையவரை மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை கொக்குவில் பொலிஸ் நிலைய பெண்கள், சிறுவர் பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர்.


# மசூர் மௌலானாவின் துணைவி காலமானார்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மர்ஹூம் செனட்டர் மசூர் மௌலானா அவர்களின் அன்பு மனைவி பிஸ்ரத்துல் நயீமா மௌலானா நேற்று சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் காலமானார்.

அன்னார் ஜெஸ்மின் மௌலானா, அக்ரம் மௌலானா, ஷியாம் மௌலானா, மபாஹிர் மௌலானா, இல்ஹாம் மௌலானா, நௌஷாட் மௌலானா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஜனாஸா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் கொழும்பு மாளிகாவத்தை மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.



# கிழக்குத் தீமோர் வழிமுறையில் இங்கும் ஐ.நா. சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முயல வேண்டும்!

## தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் வலியுறுத்து

பொதுசன வாக்கெடுப்பை நடத்த கிழக்கு தீமோர் வழிமுறையே பொருத்த மானது: ஆர்ப்பாட்டத்தின் பின் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவிப்பு

இலங்கையின் வடக்கு கிழக்கில் பொதுவாக்கெடுப்பை நடத்துவதற்கு கிழக்கு தீமோரில் ஐ.நா. பயன்படுத்திய வழிமுறையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பின்பற்ற வேண்டும் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக 2,400 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் அவர்களது போராட்ட தளத்திற்கு முன்னால் நேற்று கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அந்த ஆர்ப்பாட் டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் –

13 ஆவது திருத்தத்தை யாரேனும் விரும்பினால், இலங்கை நீதிமன்றத் திற்குச் செல்லவேண்டும். 1987ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசமைப் பில் அங்கம் வகிக்கும் 13ஆவது திருத் தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோர வேண்டும். 13 ஆவது திருத்தம் நாட்டின் சட்டமாகும். எனவே எந்த அரசாங்கமும் அதனை நடைமுறைப்படுத்த மறுத்தால் அதனை விரும்பும் தமிழ் அரசியல்வாதி கள் நீதிமன்றத்தையே நாடவேண்டும்.

இலங்கையின் நீதித்துறை அதனை அமுல்படுத்துவதில் தோல்வியடைந் தால், இலங்கை தனது சொந்த அர சமைப்பை மதித்துப் பின்பற்றவில்லை என்பதையே அது உலகிற்கு காட்டுகின் றது.

அத்துடன் தமிழர்களுக்குத் தேவை தமிழர்களுக்கு உதவுகின்ற ஓர் அர சமைப்பே. சிங்கள அரசமைப்பு எமக்கு வேண்டாம். 13 ஆவது திருத்தம் என்பது தமிழர்களுக்கான அரசியல் தீர்வோ அல்லது தமிழர்களுக்கு உதவுவதற்கா னதோ அல்ல. இந்தியர்கள் இலங்கை மீது வைத்த பொறி அது.

இந்தியா எப்போது இலங்கை மீது படையெடுக்க விரும்புகிறதோ அல்லது இலங்கைக்கு வர நினைக்கிறதோ, அப்போதெல்லாம் 1. ஆவது திருத்தம், அவர்களின் துரும்பாக இருக்கும்.

எனவே, பாதிக்கப்பட்டவர்களாகிய நாங்கள், இலங்கையின் வடகிழக்கில் சுதந்திர வாக்கெடுப்பு நடத்தவும், அதற்கா கப் பிரச்சாரம் செய்யவும் ஐ.நாவைக் கோருகிறோம்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கு கிழக்கு தீமோரில் ஐ.நா. பயன்படுத்திய முறை மற்றும் வழிமுறையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பின்பற்ற வேண்டும் எனத் தெரிவித்தனர்.





# இவ்வாண்டு 27 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்படும் என்று நம்பிக்கை

தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு சிறந்த மட்டத்திலேயே காணப்படுகிறது. இவ்வாண்டில் சுமார் 27 கோடிகிலோ தேயிலை உற்பத்தியை எதிர்பார்ப்பதாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களின் வருடாந்த மாநாடு நேற்று சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அமைச்சர், அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு தேயிலை உற்பத்தி உயர் மட்டத்திலேயே காணப்படுகிறது. கடந்த ஆண்டு இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக விளைச்சல் பாரியளவில் வீழ்ச்சியடைந்தது. ஆனால், இவ்வாண்டு உற்பத்தி அதிகரித்துள்ளது. தேயிலைத் தோட்ட மற்றும் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு கிடைக்கும் இலாபம் தொடர்பில் நாம் கலந்துரையாடியுள்ளோம்.

அதற்கமைய, தேயிலை உற்பத்திக்காக வழங்கப்படும் அனைத்து வசதிகளையும் தொடர்ந்தும் வழங்குவதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு தேயிலை சபையால் வழங்கப்படும் நிதியின் ஊடாக தேயிலை தொழிற்துறையை மேலும் மேம்படுத்துவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நீரிழிவு உள்ளிட்ட நோய்களை கட்டுப்படுத்தும் நோக்கத்திலேயே இரசாயன உரப் பாவனைக்கு தடை விதித்தார்.

எவ்வாறிருப்பினும், இது தொடர்பில் எம்மால் ஆலோசனைகள் வழங்கப்பட்ட போதிலும், தீர்மானத்தை செயற்படுத்தும்போது ஏற்பட்ட சிக்கல்களால் இறுதியில் முழு நாடும் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்தது.

இலங்கையில் கடந்த 2013ஆம் ஆண்டு அதிகளவான தேயிலை உற்பத்தி பெறப்பட்டது. அவ்வாண்டில் 34 கோடி கிலோ உற்பத்தி பெறப்பட்டது.

2015இல் இந்த நிலைமையை மீண்டும் அடைய முடிந்தது. அதன் பின்னர் படிப்படியாகக் குறைவடைந்து கடந்த இரண்டு ஆண்டுகளில் 25 முதல் 27 கோடி கிலோ உற்பத்தியையே பெற முடிந்துள்ளது. இவ்வாண்டிலும் 27 கோடி கிலோ விளைச்சலை எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# எதிர்காலத்தில் தனியார் துறையினாலேயே நாட்டின் பொருளாதாரம் இயக்கப்படுமாம்!

## ஒழுங்குபடுத்தும் அதிகார சபையாக மாத்திரமே அரசு செயற்படும்

நாட்டின் பொருளாதாரம் எதிர்காலத்தில் தனியார் துறையினராலேயே இயக்கப்படும். ஒழுங்குபடுத்தும் அதிகார சபையாக மாத்திரமே அரசாங்கம் செயற்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

”பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதில் அரசாங்கம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஆனால் நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டும்.



இந்த ஆண்டு இறுதிக்குள் பொருளாதாரத்தில் அதிக ஸ்திரத்தன்மை ஏற்படும். அந்த நேரத்தில் வரி நிர்வாக முறையை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

நாங்கள் அதைப் பற்றி விவாதம் செய்யலாம். இருப்பினும், நாங்கள் முதலில் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தி பலப்படுத்த வேண்டும்.

2023ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் இலங்கை தனது கடன் மறுசீரமைப்பு செயல்முறையை முடிக்க உத்தேசித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் முதல் மதிப்பாய்வு இடம்பெற்று வருகிறது. இது ஒரு நீண்ட மதிப்பாய்வாக இருக்கும்.

கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் கலந்தாய்வுகள் நடத்தப்படும். ஜனாதிபதி இறுதிக் கூட்டத்தை 26 ஆம் திகதி (செப்டெம்பர்) நடத்துவார்“ என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# ரயிலுடன் மோதி இளைஞன் சாவு




அநுராதபுரத்தில் இருந்து கெலன்னாவை நோக்கி எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் நள்ளிரவு 11.15 மணியளவில் மஹவ மடபொகுன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

உயிரிழந்தவர் மஹவ மடபொகுன பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த மரணம் தற்கொலையா அல்லது விபத்தா எனப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இரண்டாயிரம் அரசாங்க வாகனங்கள்

## அரசியல்வாதிகளால் துஷ்பிரயோகம்!



அரசியல்வாதிகள், பொலிஸ் அதிகாரிகள், பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட 2 ஆயிரம் உத்தியோகபூர்வ வாகனங்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்களது தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன எனப் புலனாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பெருமளவில் அரச நிதி வீண் விரயமாகின்றமையும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை சிலர் தங்களது தனியார் வாகனங்களைத் தாம் பணிபுரியும் நிறுவனத்துக்கு வாடகைக்கு வழங்கி அவற்றையும் தங்களது உத்தியோகபூர்வ வாகனங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்கள் அவர்களது மனைவியர் மற்றும் பிள்ளைகளின் பாடசாலை பயணங்களுக்கும் குடும்ப உறுப்பினர்களின் ஏனைய பயணங்களுக்கும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன எனப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடும்ப உறுப்பினர்களின் பயணங்களுக்கு பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட படையினரை சாரதிகள் பணிக்குப் பயன்படுத்துகின்றமையோடு அரசாங்கத்தினால் வழங்கப்படும் எரிபொருளையும் பயன்படுத்துவதாலும் இந்த நிதி இழப்பு இரண்டு, மூன்று மடங்காக அதிகரிப்பதாகத் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தாதியர் பயிற்சியில் இணைய இப்போது விண்ணப்பிக்கலாம்

தாதியர் பயிற்சிக்காக மாணவர்களை உள்வாங்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் 2023 ஆம் ஆண்டுக்கான தாதியர் பயிற்சி கற்கை நெறிக்கு ஆள்சேர்ப்பதற்கு இணையத் தள வழியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்காக 2019, 2020 ஆம் ஆண்டு உயர் தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.



விண்ணப்பங்களை ஒக்டோபர் 18 ஆம் திகதி வரை அனுப்பி வைக்க முடியும் என்றும் ஒரு விண்ணப்பதாரியினால் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன், வர்த்தமானி அறிவித்தல் மற்றும் இணையத்தளம் வழியாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் நன்றாக வாசிக்க வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களை சுகாதார அமைச்சின் www.health@gov.lk எனும் இணையத்தளத்தினூடாக மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத்தளம் ஊடாக மாணவர் தாதியர் பயிற்சிக்கான ஆசேர்ப்பு – 2023 விண்ணப்பிக்க http://recruit.health.gov.lk/ என்ற இணைய தொடர்பை நாடலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.09.2023




உங்கள் முயற்சிகளில் விருப்பமான பலன்கள் கிடைக்கும். சில எதிர்ப்பாராத பலன்கள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் பணிகளை நீங்கள் விரைந்து ஆற்றுவீர்கள். கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாக விரைவில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்துகொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று நீங்கள் ஆற்றலுடன் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சுமாராக இருக்கும். இன்று உங்களிடம் அவநம்பிக்கை உணர்வு காணப்படும். முக்கிய முடிவுகளால் நற் பலன்கள் கிடைக்காது. தன்னம்பிக்கை குறைந்திருக்கும்.

இன்று பணியிடத்தில் வளர்ச்சி காணப்படாது. பணிகளில் தவறுகள் காரணமாக பனியின் தரம் குறையும். அதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உணர்ச்சி வசப்படுவதால் உறவில் நல்லிணக்கம் குறையும். எனவே அதனை சரி செய்து மகிழ்ச்சியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக காணப்படாது. தேவையற்ற பொறுப்புகளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். எனவே பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

இன்று தொண்டை சம்பந்தமான தொற்றுகள் ஏற்படலாம்.




இன்று உங்களின் உற்சாகம் குறைந்திருக்கும். அதை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். மகிழ்ச்சியற்ற சில சூழ்நிலைகள் உருவாகும். எனவே திட்டமிட்டு அதன் படி செயலாற்ற வேண்டும்.

அதிகப் பணிகள் காரணமாக உங்கள் செயல் திறன் பாதிக்கும். இதனை சிறப்பாக திட்டமிடவேண்டியது அவசியம்.

குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் காரணமாக உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்படும். எனவே அவருடனான வேறுபாட்டை பேசி சரி செய்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது.எனவே கவனமாக இருக்க வேண்டும்.




இன்று உங்களால் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள இயலும் என்பதால் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இன்று வளர்ச்சி காணப்படும்.

பணியில் மிகுந்த திருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். அவருடன் சிறந்த முறையில் தொடர்பு கொள்வீர்கள். உறவில் அன்பு பெருகும்.

உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் காணப்படும். இன்று அதிகம் சம்பாதிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சீராக இருக்கும்.




இன்று அமைதியின்மை காணப்படும். இன்று கவனமுடன் செயலாற்ற வேண்டும். நம்பிக்கை தரும் எண்ணங்களை வளர்த்துக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

பணிகளைப் பொருத்தவரை உங்களுக்கு குறைவான வாய்ப்புகளே காணப்படும். அதிக பணிகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள்.

இன்று அதக பணம் சம்பாதிக்க இயலாது. உங்களுக்கு தேவைப்படும் பணத்தை பெற இயலாது.

இன்று தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. ஆரோக்கியமாய் இருக்க இன்று மகிழ்ச்சியுடன் இருங்கள்.




இன்று அவநம்பிக்கை உணர்வு கானபட்டும். உங்கள் செயலில் நேர்மை அவசியம். மன அழுத்தத்தை சமாளிக்க இன்றைய நாளை அனுபவித்து மகிழுங்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.

இன்று பணிகள் இறுக்கமாகக் காணப்படும். பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் பணியில் தாமதங்கள் காணப்படும். உங்கள் பணிகளை தொழில் சார்ந்த முறையில் செய்வதற்கு திட்டமிட வேண்டும்.

இன்று உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும் என்பதால் உங்கள் துணையிடம் பேசும் போது கவனம் தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். இன்று பணவரவு காணப்பட்டாலும் வளத்தை தக்க வைப்பது கடினம்.




இன்று கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும். இன்று உங்கள் இலக்குகளை அடைய கடுமையாக உழைக்க வேண்டும். முக்கியமான செயல்களை தள்ளிப்போடுவது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாத காரணத்தால் உங்கள் மனதில் கவலை ஏற்படும்.

இன்று எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை தவிர்த்து உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறை கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் தந்தையின் உடல் நிலையில் பாதிப்பு இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று நம்பிக்கை நிறைந்து காணப்படும். முன்னேற்றகரமான நாள். இன்று தைரியமும் உறுதியும் அதிகமாக காணப்படும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களுக்கென்று ஒரு தரத்தை நிர்ணயம் செய்து கொண்டு அதனை உங்கள் பணிகளில் வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் காதல் உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க காண்பீர்கள். அதனை நல்ல காரியங்களுக்காக பயன்படுத்துவீர்கள்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -17.09.2023




இன்று நம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்களுடன் தைரியமும் உறுதியும் ஏற்படும். பொதுவாக இன்று முன்னேற்றம் காணப்படும். இது உங்களுக்கு தன்னம்பிக்கை அளிக்கும்.

நீங்கள் இன்று புத்துணர்ச்சியுடனும் வெற்றி பெற வேண்டும் என்ற திட மனதுடனும் காணப்படுவீர்கள். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு காணப்படும். இதனால் இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். இன்று அதிர்ஷ்டம் நிறைந்த நாளாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் திட மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சாதரணமாக இருக்கும். உங்கள் நடவடிக்கைகளில் பொறுமை கடைபிடிக்க வேண்டும். கடினமான பணிகளை எளிதாக ஆற்றுவது எப்படி என்று கற்றுக் கொள்வது உதவிகரமாக இருக்கும்.

நீங்கள் பணியில் கவனமாகவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும். சிறு தடைகள் உங்கள் நேரத்தை வீணடிக்கலாம். திட்டமிட்டு செயல்பட்டால் சமூகமாக இருக்கும்.

உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை ஒருபக்கம் தள்ளி வைத்து இருவரும் ஒரு பொதுவான முடிவுக்கு வர வேண்டும்.

இன்று உங்களிடம் பணம் குறைவாக காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும்.




இன்று மந்தமான நாளாக இருக்கும். இன்று உங்கள் தைரியம் குறைந்து காணப்படும். நேர்மறையாக சிந்தித்து மன ஆற்றலுடன் செயல்படுவது நல்லது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடனான உறவு சிறப்பாக இருக்காது. அவர்களுடன் உங்கள் அணுகுமுறையை மாற்றி சிறந்த முறையில் பழக வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று பதட்டமுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் கெடும். பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.




இன்று முன்னேற்றகரமான நாள். இன்று நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். அதனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் தகவல் தொடர்பு மூலம் நிறைய சாதிப்பீர்கள்.

பணியைப் பொறுத்தவரையில் நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். பயணம் செய்வதற்கான வாய்ப்பு அல்லது வெளி நாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் முன்னேற்றத்துக்கு இந்த நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் சீரான மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் இனிமையான பேச்சின் மூலம் உங்கள் துணையின் மனதைக் கவர்வீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். குடும்பத்தின் பயனுள்ள தேவைகளுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் சிறந்த ஆற்றலும் தைரியமும் காணப்படும்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS

KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPARK JA-ELA

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park